புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

**No.4/TD/DTC/PA/2014/23** புதுச்சேரி, தேதி: 06.03.2014

<u>செய்திக் குறிப்பு</u>

புதுச்சேரி 100அடி சாலையில் மேம்பால பணிகள் நடைபெறுவதைத் தொடர்ந்து போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது. மரப்பாலத்திலிருந்து இந்திரா காந்தி சதுக்கம் வரை தெற்கிலிருந்து வடக்காக ஒரு வழிப்பாதையில் வாகனங்கள் செல்லும் வகையில் மாற்றம் செய்யப்படுகிறது. தற்போது 100அடி சாலையில் உள்ள இரயில்வே கேட் மூடப்பட்டு அதற்கு அருகிலேயே மேற்கு பக்கம் ஒரு வழி பாதையில் வாகனங்கள் செல்ல வசதியாக இரயில்வே கேட் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்திரா காந்தி சதுக்கம் முதல் மரப்பாலம் வரை வடக்கில் இருந்து தெற்காக வாகனங்கள் செல்ல அனுமதி இல்லை என்பதால் வடக்கிலிருந்து வரும் வாகனங்கள் அனைத்தும் புவன்கரே வீதி மற்றும் புதிய பேருந்து நிலையம் வழியாக வெங்கடசுப்பா ரெட்டியார் சதுக்கத்தை கடந்து கடலூர் சாலையில் செல்லும் வகையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது. மேற் குறிப்பிட்ட போக்குவரத்து மாற்றம் 07.03.2014 இரவு முதல் நடைமுறைக்கு வருகிறது என்பது பொது மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

GOVT. OF PONDICHERRY
TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்